# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப்பரீட்சை - 2018

| தரம் -07 | வரலாறு | நேரம் : 2 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

❖ சரியான விடையினைத் தெரிவு செய்க.

1 முற்காலத்தில் எமது நாட்டில் வாழ்ந்த மக்கள் எதிர்நோக்கிய சவால் யாது?
1. வேட்டையாடுவதற்கு மிருகங்கள் கிடைக்காமை
2. சேனைப் பயிர்ச்செய்கைக்கான நிலத்தைத் தயார் செய்தல்
3. வாழ்க்கைக்கு தேவையான உணவு குடிபானங்களைத் தயாரித்தல்
4. களிமண் ,தடிகளைக் கொண்டு வீடுகளை அமைத்தல்

2 உலகின் பிரதான விவசாய முறையாகக் கருதப்படுவது
1. நெற்செய்கை  2. சேனைப்பயிர்ச்செய்கை
2. .பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை  4. பழப்பயிர்ச்செய்கை

3 எந்த மன்னனின் ஆட்சிக்காலத்தில் சேனைப்பயிர்ச் செய்கை இடம் பெற்றதாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது.
1. துட்டகைமுனு  2. காவந்தீசன்  3. வசபன்  4. மகாசேனன்

4 துட்டகைமுனுவின் மகன் பிறந்த காலத்தில் கரைநெல் அதிகளவு விளைந்திருந்தது எனக் குறிப்பிடப்படும் நூல்
1. மகாவம்சம்  2. இராஜ தரங்கனி
3. சீஹலவத்து  4. மதுபாச்சியா



5 அருகிலுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளது
1. வேளாண்மைக் குதிர்  2. ஹெலிகடா
3. அறுவடை செய்தல  4. நவதெனி சேனை

6 "சேற்று நிலப்பயிர்ச் செய்கை" என எப் பயிர்ச்செய்கை அழைக்கப்படுகின்றது
1. நெல்  2. சோளம்  3. சேனை  4. பெருந்தோட்டம்

7 புராதன கல்வெட்டுக்களில் வெவ்ஹமிக , வபிஹமிக எனக் குறிப்பிடப்படுவது எதனுடன் தொடர்பானதாகும்.
1. நெற்பயிர்ச்செய்கை  2. கிராமக்குளங்கள்
3. கைத் தொழில்  4. உள்நாட்டு வர்த்தகம்

8 நெற்செய்கையில் மூன்று போகங்கள் பயிர்செய்யப்பட்டதாக குறிப்பிடப்படும் கல்வெட்டு எது?
1. கல்பொத்த  2. தோணிக்கல்  3. பதுளைத்தூண்  4. அம்பகமுவ

9 "தவளம்" முறை எனப்படுவது
1. மாடுகளின் முதுகில் பொருட்களை ஏற்றிச் செல்லுதல்
2. அயலவரின் வயலில் வேலை செய்தல்
3. காடுகளுக்குத் தீயிடுதல்
4. உணவை உருண்டையாக்கி உண்ணுதல்



kalvi.lk

10 நானாதேசிகர் வலஞ்சியர் என்பவை எதைக் குறிப்பிடுகின்றது.
1. இலங்கைக்கு வந்த நாடுகாண் பயணிகளை
2. தென்னிந்திய வர்த்தக அமைப்புக்களை
3. அநுராதபுரத்தை ஆண்ட மன்னர் பரமபரையினை
4. அரச சபையில் நடமாடும் பெண்களை



11 அருகிலுள்ள படத்தில் காட்டப்பட்ட உபகரணம் எக் கைத்தொழிலுடன் தொடர்புபட்டது
1. உலோகம்
2. களிமண்
3. பஞ்சு
4. இரத்தினக்கல்

12 4ம் உதய மன்னனால் சந்தையில் இடம்பெறும் முறைகேடான சம்பவங்களைத் தவிர்ப்பதற்காக சட்டதிட்டங்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டு எது?
1. அமபகமுவ கல்வெட்டு
2. சொரபொரகல்வெட்டு
3. பதுளைத்தூண் கல்வெட்டு
4. கல்பொத்த கல்வெட்டு

13 துட்டகைமுனுமன்னனின் மகன் பிறந்த போது அதிகளவு கரையரிசி விளைந்திருந்தமையால் அவனது பெயர்
1. சண்முக குமரன்
2. அஸ்தின குமரன்
3. விஸ்வ குமரன்
4. சாலிய குமரன்

14 சேனைப் பயிர்ச்செய்கைக்காக மேற் கொள்ளப்படும் “பெல” என்ற செயற்பாடு எதனைக் குறிக்கின்றது.
1. கம்புகளால் வேலி அமைத்தல்
2. தீயிட்டு புதிய நிலங்களை உருவாக்குதல்
3. பரண் அமைத்துப் பயிர்களைப் பாதுகாத்தல்
4. பாதுகாப்பிற்காக தீயை எரிய விடுதல்

15 இலம்ப கர்ண அரச வம்சத்தின் முதலாவது ஆட்சியாளன்
1. தேவநம்பிய தீசன்
2. வசபன்
3. வலகம்பா
4. தாதுசேனன்

16 35 ஆண்டு காலமாக நிலவிய சமாதானமான அரசியல் சூழலில் நாட்டை ஆட்சி செய்த மன்னன்
1. 2 ஆம் நரசிங்க வர்மன்
2. 1 ஆம் சேனன்
3. 2 ஆம் சேனன்
4. 2 ஆம் தாடோபதீசன்

17 மன்னன் தனது பொறுப்புக்களை சட்ட ரீதியாகப் பொறுப்பேற்கும் ஒரு சந்தர்ப்பம் எது?
1. கும்பாபிஷேகம்
2. பட்டாபிஷேகம்
3. சங்காபிஷேகம்
4. மண்டலபிஷேகம்

18 இந்தியாவில் பல்லவ அரசிற்கு தப்பிச் சென்ற மானவர்மன் அங்கு எந்த பல்லவ மன்னனுக்கு விசுவாசமாகப் பணியாற்றினான்.
1. முதலாம் நரசிங்கவர்மன்
2. ஸ்ரீமாற ஸ்ரீ வல்லபன்
3. வரகுணவர்மன்
4. தாடோபதீசன்

19 அநுராதபுர யுகத்தின் பின்னரைக்காலப் பகுதியில் கிராமத்தை நிர்வகித்தவர் எவ்வாறு அழைக்கப்பட்டார்
1. ரட்டலத்தன்
2. கம்லத்தன்
2. அதெகவரு
4. யுவராஜன்

20 பத்துக் கிராமங்களுக்கும் ஒவ்வொரு வைத்தியர் வீதம் நியமித்து வைத்திய சேவை வழங்கிய மன்னன்
1. முதலாம் உபதிஸ்ஸ
2. முதலாம் உதயன்
3. ஐந்தாம் காசியப்பன்
4. புத்ததாச மன்னன்

(20X 2= 40புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

❖ முதலாம் வினா உட்பட ஏதாவது ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1)

I. மாணவர்களால் மேற்கொள்ளப்படும் கணிப்பீட்டு வகைகள் மூன்றினை எழுதுக?

II. கணிப்பீட்டினை மேற்கொள்ளும் போது எதிர் நோக்கும் பிரச்சினைகள் நான்கினைக் குறிப்பிடுக?

III. கணிப்பீட்டினை மேற்கொள்வதால் ஒரு மாணவர் பெற்றுக் கொள்ளும் அனுகூலங்கள் ஐந்தினை எழுதுக?

(3+4+5=12 புள்ளிகள்)

2)

I. இலங்கையில் மக்களின் புராதான வாழ்க்கை முறை மூன்று துறைகளின் கீழ் இடம்பெற்றது. அந்த மூன்று துறைகளும் எவை?

II. சேனைப்பயிர்ச்செய்கை ஒன்றினை மேற்கொள்வதற்கு உரிய செயற்பாடுகள் (பணிகள்) நான்கினை எழுதுக?

III. பின்வரும் சொற்பதங்களுக்குரிய விளக்கம் தருக

1) கினியாதிகாவ :-
2) அகலஹஸ
3) ஹெலிகடா:-
4) களம்:-
5) அத்தம் முறை:-

(3+4+5=12 புள்ளிகள்)

3)

I. ஆதிகாலத்தில் பசுவில் இருந்து பெறப்பட்ட போசனை மிகுந்த 3 பொருட்களைக் குறிப்பிடுக.

II. இலங்கையில் புராதன காலத்தில் இடம்பெற்ற கைத்தொழில் தொடர்பான சொற்பதங்கள் அடைப்பினுள் தரப்பட்டுள்ளன. அவற்றை பின்வரும் தலைப்புக்களுக்கு பொருத்தமான வகையில் தெரிந்தெடுத்து எழுதுக.

1. கைத்தொழில்
2. உற்பத்தி
3. பயன்படுத்திய உபகரணம்
4. கலைஞர்கள்

[செங்கல்/ உலோகம்/ வனைவோன் சில்லு/ கொல்லர்/ ஆபரணங்கள்/ ஊது துருத்தி/ இரத்தினக்கல் தொழில் செய்வோர்/ பருத்தி ]

III. பதுளைத்தூண் கல்வெட்டில் காணப்படும் சந்தையின் நிர்வாகம் தொடர்பான சட்டதிட்டங்கள் நான்கினை எழுதுக.

(3+4+5=12 புள்ளிகள்)



kalvi.lk

4)

I. இலங்கையின் வெளிநாட்டு வியாபாரத்தில் முக்கியத்துவம் பெற்ற துறைமுகங்களின் பழைய பெயர்களை ஒழுங்கில் எழுதுக.

1. மன்னார்
2. திருகோணமலை
3. அம்பாந்தோட்டை

II. பாதிகாய மன்னனுக்கும் உரோமபுரிக்கும் இடையில் தொடர்புகள் பேணப்பட்டமைக்கான ஆதாரம் யாது?

III. புராதான காலத்தில் எல்லோரும் ஒற்றுமையாகச் செயற்பட்டு செய்த பொதுப் பணிகள் ஐந்தினை எழுதுக. (3+4+5=12 புள்ளிகள்)

5)

I. அநுராதபுரகாலத்தில் பெரும்பாலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்த அரசுரிமை வழங்கும் முறைகள் இரண்டினைக் குறிப்பிட்டு அவ்வாறான முறைகளில் அரசுரிமை பெற்றவர்களையும் எழுதுக.

II. மக்களுக்கு மன்னர்களால் ஆற்றப்பட வேண்டிய பணிகள் நான்கினை எழுதுக.

III. "பெரசிரித" என்றால் என்ன என்பதனை விளக்குக? (3+4+5=12 புள்ளிகள்)

6)

I. பின்வரும் அரச வம்சம் சேர்ந்த மன்னர்களைக் குறிப்பிடுக

1. இலம்பகர்ணவம்சம்
2. மோரிய வம்சம்
3. மானவர்ம அரசவர்மம்

II. மானவர்மன் பல்லவ அரசர்களின் போர்களில் உதவியதால் பல்லவ மன்னன் மானவர்மனுக்கு நன்றிக்கடனாக செய்த பணி யாது?

III. பின்வரும் அரசாட்சி முறை தொடப்பான பதங்களுக்கு விளக்கம் தருக.

1. யுவராஜன்
2. அஷஅதெக
3. அதி அதிக
4. ஆவணப்படுத்துபவர்
5. ரட்லது

(3+4+5=12 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp 075 287 1457